**மாவத்தகம பிரதேச சபை**
**குருணாகல் மாவட்டம்**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

2019 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2020 மார்ச் 28 ஆந்திகதி கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பறிக்கை 2020 ஜுன் 10 ஆந் திகதியும் விரிவான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை 2020 ஜுலை 22 ஆந் திகதியும் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

எனது அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படைப் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து மாவத்தகம பிரதேச சபையின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

**(அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | சாரதிகள் ஓய்வறை நிர்மாணத்தின் பெறுமதி ரூபா. 347,454 கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை | மூலதனச் செலவுகள் சரியாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். | எதிர்வரும் ஆண்டில் கணக்குகள் தயாரிக்கும் பொழுது இச் சொத்தினை உள்ளடக்கி சரி செய்வதற்கு நடவடிக்கை எடுப்பேன். |
| (ஆ) | பௌதீக ரீதியாக காணப்படாத ரூபா. 74,270 பெறுமதியான 5 சொத்துக்கள் நிலையான சொத்துகளின் கீழ் கணக்கிடப்பட்டிருந்தது. | பௌதிக ரீதியாக காணப்படாத சொத்துக்கள் கணக்கு களிலிருந்து நீக்கப்படல் வேண்டும். | அந்த ஈருருளிகளில் ஒன்று தற்பொழுதும் பாவனையில் உள்ளது. ஒன்று பழுதடைந்துள்ளது. அது 2019 ஏல விற்பனைக்கு விடப்பட்ட போதும் விற்கப்படவில்லை. எஞ்சிய இரண்டும் சபையுடன் தொடர்பாக இருந்த நீர்த் திட்டத்திற்காகக் கிடைக்கப் பெற்றிருந்ததுடன், நீர்த் திட்டம் சபையிலிருந்து விலகிச் சென்ற பொழுது அது எடுத்துச் |

| | | | |
|---|---|---|---|
| | | | செல்லப்பட்டுள்ளமையால் அடுத்த வருடத்திற்கான கணக்குகளிலிருந்து பதிவழிப்பதற்கு நடவடிக்கை எடுப்பேன். இழுவண்டி பாவனையில் உள்ளது. |
| (இ) | வாகன ஆவணத்தில் காணப்படுகின்ற ஈருருளியின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்கிடப்படல் வேண்டும். | இந்த வருடத்தில் மதிப்பீட்டு உத்தியோகத்தர் ஒருவரினால் ஏற்கனவே புதிய விலை மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. |
| (ஈ) | மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் இருப்பு மீதி, அட்டவணைகள் மற்றும் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கிடையில் ரூபா. 3,579,514 வேறுபாடு காணப்பட்டது. | குறித்த வேறுபாடுகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எதிர்காலத்தில் இது தொடர்பாக ஆராய்ந்து சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (உ) | மீளாய்வாண்டின் இறுதித் தினத்தில் பல்வேறு வைப்புக்கள் அட்டவணை மற்றும் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கிடையில் ரூபா. 59,281 வேறுபாடு காணப்பட்டது. | குறித்த வேறுபாடுகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்கில் பல்வேறு வைப்புக்களுள் வைப்புகளுக்கு மேலதிகமாக முத்திரை வரி மற்றும் ஊழியர் கடன் மேலதிகப் பெறுவனவும் அடங்கியுள்ளது. எனவே, அதன் கூட்டுத்தொகை ரூபா. 7,824,133 ஆகியுள்ளது. வைப்பு அட்டவணையில் வீதிக் கோட்டு வரைபட வைப்புக்கள் தவறுதலாக உள்ளடக்கப்பட்டுள்ளது. பரீட்சை மீதியிலும் காட்டப்பட்டுள்ளது. |
| (ஊ) | 6 வகை காணி கட்டிடங்களுடன் தொடர்பான நிலையான சொத்து ஆவணம் மற்றும் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கிடையில் ரூபா. 7,987,218 வேறுபாடு காணப்பட்டது. | குறித்த வேறுபாடுகளை சீர் செய்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலையான சொத்து ஆவணம் நாளதுவரையாக்கல் செய்யப்படாததன் காரணமாக நிலையான சொத்து ஆவணம் மற்றும் நிதிக்கூற்றுக்கள் ஆகியவற்றுக்கிடையில் இவ் வேறுபாடு காணப்படுகிறது. நிலையான சொத்து ஆவணத்தினை |

| | | | |
|---|---|---|---|
| | | | எதிர்காலத்தில் நாளதுவரையாக்கல் செய்வதற்கான நடவடிக்கை எடுப்பேன். |
| (எ) | தேவையான தகவல்கள் சமர்ப்பிக்கப்படாமை காரணமாக கூட்டுத்தொகை ரூபா. 16,065,152 ஆகிய 06 கணக்குத் தலைப்புகள் கணக்காய்வின் போது திருப்திகரமான முறையில் பரிசீலிக்கப்பட முடியாது போனது. | நிதிக்கூற்றுக்களில் காட்டப்பட்டுள்ள கணக்கு மீதிகளை உறுதி செய்வதற்கான ஆதாரங்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். | நீண்ட காலத்திற்கு முன்பிருந்து காணப்பட்டு வருகின்ற வேலை முற்பணம் தொடர்பான ஆவணங்கள் இல்லை. மோட்டார் வாகனம் மற்றும் இழுவண்டி ஆவணத்தினை எதிர்காலத்தில் நாளதுவரையாக்குவதற்கான நடவடிக்கை எடுப்பேன். கொங்ரீட் திட்டத்துடன் தொடர்பான நீண்ட காலத்திற்கு முன்பிருந்து காணப்பட்டு வருகின்ற வருமானத் தொகை கணக்கின் அட்டவணைகளில் காணப்படுகின்ற அதேவேளை அது தவிர்ந்த வேறெந்த தகவல்களும் இல்லை. |

## 1.4 இணங்காமைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|---|
| (அ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் தாபனக் கோவை | | | |
| | vii ஆம் பாகத்தின் 12.2.5ஆம் பிரிவு | முறையான நியமனம் இன்றி, செயலாளர் பதவியில் பதில் கடமை புரிகின்ற உத்தியோகத்தரால் 2016 ஜுன் மாதம் தொடக்கம் 2019 டிசம்பர் வரை ரூபா. 226,156 பதில் கடமைக் கொடுப்பனவு பெறப்பட்டிருந்தது. | நியமனக் கடிதத்திலுள்ள நிபந்தனைகளின் அடிப்படையில் செயற்படல் வேண்டும். | MN 07 ஆரம்பச் சம்பளத்தில் 1/6 பதில் கடமைக் கொடுப்பனவாக செலுத்தப்பட்டுள்ளதென்பதை தயவுடன் தெரிவித்துக்கொள்கிறேன். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதிக் கோவை 1646 | 2019 ஜனவரி – ஒக்டோபர் வரை 06 வாகனங்களின் போக்குவரத்துக் குறிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | போக்குவரத்துக் குறிப்புகள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும் | குறித்த போக்குவரத்துக் குறிப்புகளை கூடிய விரைவில் கணக்காய்வு அலுவலகத்திற்கு சமர்ப்பிப்பதாக தயவுடன் குறிப்பிடுகிறேன். |
| (இ) | 2016 டிசம்பர் 29ஆம் திகதிய 30/2016 இலக்க அரச நிர்வாகச் சுற்றறிக்கை. | 10 வாகனங்களின் எரிபொருள் விரயம் தொடர்பான பரிசோதனை மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் செயற்படல் வேண்டும். | இயந்திரப் பொறியியலாளரினால் ஒருசில வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டதாகவும், ஏனைய வாகனங்களுக்கான எரிபொருள் பரிசோதனை செய்வதற்காக எதிர்காலத்தில் வருவதாகவும் அறிவித்துள்ளார். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்காக சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 16,862,027 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 30,308,129 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

**மதிப்பிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்**

மீளாய்வாண்டிற்கான சபையின் மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது

| வருமானம் | 2019 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை | 2018 மதிப்பிடப்பட்ட வருமானம் | பட்டியலிடப்பட்ட வருமானம் | சேகரிக்கப்பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் உள்ளவாறு மொத்த நிலுவை |
|---|---|---|---|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| வீதவரியும் வரியும் | 5,470,668 | 4,848,899 | 3,417,680 | 4,948,308 | 4,960,668 | 9,609,883 | 4,769,763 | 4,840,120 |
| வாடகை | 20,244,740 | 8,073,220 | 8,234,905 | 1,739,160 | 10,109,160 | 10,180,395 | 10,180,394 | 2,132,618 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 303,000 | 261,820 | 261,800 | 70,400 | 602,000 | 326,728 | 326,728 | 70,400 |
| ஏனைய வருமானம் | 127,415,180 | 122,865,305 | 73,413,517 | 66,852,352 | 115,775,004 | 174,990,230 | 177,990,230 | 71,176,901 |
| மொத்தம் | 153,433,588 | 136,049,244 | 85,327,902 | 73,610,220 | 131,446,832 | 195,107,236 | 193,267,115 | 78,220,039 |

### 2.2.2 வீதவரியும் வரியும்

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்ப நிலுவையாகவிருந்த ரூபா. 4,840,120 தொகையில் வருடத்தினுள் அறவிடப்பட்ட தொகை ரூபா. 931,648 அதாவது 19 எனும் குறைந்த வீதமாகவே காணப்பட்டது. | பிரதேச சபை விதிமுறைகளுக்கு இணங்க நிலுவைகளை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஏதிர்காலத்தில் நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கான நிகழ்ச்சிகளை நடாத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. |
| (ஆ) | பல வருடங்களாகக் காணப்பட்டு வருகின்ற அரச நிறுவனங்களின் வீதவரி நிலுவை ரூபா. 93,883 ஆகக் காணப்பட்டது. | பிரதேச சபை விதிமுறைகளுக்கு இணங்க நிதியினை அறவிட நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | அரச நிறுவனங்களின் வீதவரி நிலுவையினை அறவிடுவதற்கு நிறுவனங்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டு தற்பொழுது அதில் ஒரு பகுதி அறவிடப்பட்டுள்ளது. |
| (இ) | வீதவரி சொத்து மதிப்பீடு 05 வருடங்களுக்கு ஒரு முறை மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதும் இறுதியாக 2012 ஆம் ஆண்டு நடாத்தப்பட்ட சொத்து மதிப்பீட்டினை அடிப்படையாக வைத்து வீதவரி அறவிடப்பட்டிருந்தது. | புதிய மதிப்பீடு செய்யப்பட்டு வீதவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | 2012ஆம் ஆண்டு மேற்கொள்ளப்பட்ட மதிப்பீடு 2017ஆம் ஆண்டே அமுல்படுத்தப்பட்டது. புதிய மதிப்பீட்டினை மேற்கொள்வதற்கு எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும். |

### 2.2.3 வாடகை

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆரம்பத்தில் ரூபா. 2,132,618 ஆகக் காணப்பட்ட நிலுவையில் வருடத்தினுள் ரூபா. 664,604 மாத்திரமே அறவிடப்பட்டிருந்தது. | ஓப்பந்தத்தின் அடிப்படையில் வாடகை அறவிடப்படல் வேண்டும். | கருத்து தெரிவிக்கப்படவில்லை. |
| (ஆ) | மாவத்தகம பொது சந்தையின் மாட்டிறைச்சிக் கடையை ரூபா. 106,847 மாதாந்த வாடகைக்காகப் | ஓப்பந்த வாடகைத் தொகையை | மாதாந்தக் கட்டணமாக ரூபா. 106,847 தொகைக்கான |

| | | | |
|---|---|---|---|
| | பெற்ற ஒருவர் ஒப்பந்தத் தெகையை விடக் குறைவான தொகையை செலுத்தியதன் காரணமாக 2019 பெப்ரவரி தொடக்கம் ஜூன் வரையான காலப்பகுதியில் ரூபா. 54,310 நட்டம் ஏற்பட்டிருந்தது. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டிருந்த போதும் அத்தொகை அதிகம் என்றும் அதனைக் குறைத்துத் தரும்படியும் அவரால் விடுக்கப்பட்ட வேண்டுகோலின் படி மீள் மதிப்பீட்டுத் தொகை 12 மாதங்களால் பிரிக்கப்பட்டு ரூபா. 97,943 என கட்டணம் அறவிடப்பட்டுள்ளது. |
| (இ) | மாவத்தகம பொது சந்தையின் ஆட்டிறைச்சி மற்றும் கோழிக் கடையை ரூபா. 53,609 மாதாந்த வாடகைக்காகப் பெற்ற ஒருவர் கடை திறக்கப்பட்ட தினங்களில் மாத்திரம் வாடகை செலுத்தியதன் காரணமாக 2019 ஜனவரி தொடக்கம் நவம்பர் வரையான காலப்பகுதியில் ரூபா. 68,117 நட்டம் ஏற்பட்டிருந்தது. | முறையான ஒப்பந்தத்தின் அடிப்படையில் வாடகைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கடை திறக்கப்பட்ட தினங்களில் மாத்திரம் பொது சுகாதார வைத்தியப் பரிசோதகர் மூலம் பெறப்பட்ட அறிக்கையின் அடிப்படையிலும் பிரதேச சபை மூலம் பெறப்பட்ட விசேட அனுமதியின் அடிப்படையிலும் கட்டணம் அறவிடப்பட்டது. |
| (ஈ) | மாவத்தகம பொது சந்தையின் 8 கடைகள் தொடர்பாக 2019 டிசம்பர் 31ஆம் திகதியன்று ரூபா. 154,153 தொகை நிலுவையாகக் காணப்பட்டது. | ஒப்பந்த வாடகைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | கவாடகையின் ஒரு பகுதி ஏற்கனவே அறவிடப்பட்டுள்ளதுடன், மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| (உ) | சபைக்குச் சொந்தமான கட்டிடங்களை வாடகைக்கு விட்டதன் மூலம் நீண்ட காலமாக அறவிடப்பட வேண்டியுள்ள ரூபா. 1,028,478 நிலுவைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஒப்பந்த வாடகைத் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவைக் கட்டிட வாடகையை நீக்கி விடுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. |

### 2.2.4 அனுமதிப்பத்திரக் கட்டணம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பல வருடங்களாக நிலுவையாகக் காணப்பட்ட ரூபா. 70,400 தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | வருடாந்த அனுமதிப்பத்திரக் கட்டணத்தை குறித்த தினத்தில் அறவிடுவதற்கான நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | நிலுவை வருமானத்தை நீக்கி விடுவதற்காக உள்ளூராட்சி ஆணையாளருக்கு கடிதம் அனுப்பி வைக்கப்பட்டுள்ளதுடன் இதுவரையில் அதற்கான அனுமதி கிடைக்கவில்லை. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆவது பிரிவின் கீழ் பொதுமக்கள் சுகாதாரம், பொது பயன்பாட்டுச் சேவைகள் மற்றும் பொது வீதிகள் தொடர்பான விடயங்களை முறைப்படுத்தல் மற்றும் நிர்வகித்தல், பொதுமக்களின் பொழுதுபோக்கு வசதிகள் மற்றும் நலன்புரி போன்ற சபையினால் நிறைவேற்ற வேண்டியிருந்த குறிக்கோள்களை நிறைவேற்றுதல் தொடர்பாக வெளிப்படுத்தப்பட்ட விடயங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

### (அ) உப விதிகள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| பிரதேச சபைகள் சட்டத்தின் 126 ஆம் பரிவின் கீழ் 30 பிரதான பணிகளை நிறைவேற்றுவதற்காக உப விதிகள் பிறப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும், சபையினால் விதிக்கப்பட்ட உப விதிகள் தொடர்பான விபரங்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படவில்லை. | விதிக்கப்பட்டஉப விதிகளை ஏற்றுக் கொள்வதுடன் சபையின் தேவையின் அடிப்படையில் உப விதிகளை விதித்து அவற்றின்படி செயற்படல் வேண்டும். | சபையினால் உப விதிகள் விதிக்கப்படவில்லை. |

## (ஆ) மதிப்பீடு செய்யப்பட்ட திட்டங்களை நிறைவேற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2019 ஆம் ஆண்டின் மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூபா. 850,000 ஆகவிருந்த 08 செயற்திட்டங்கள் வருடத்தினுள் பூர்த்தி செய்யா்ாடாதிருந்ததுடன் மதிப்பிடப்படாத ரூபா. 31,874,043 பெறுமதியான 37 நிர்மாணங்கள் நிறைவு செய்யப்பட்டிருந்தன. | வரவு செலவுத் திட்ட ஒதுக்கீடுகள் முறையாகப் பயன்படுத்தப்படல் வேண்டும். | பிரதேச மக்களின் அதிகமான வேண்டுகோள்கள் மற்றும் மழைக் காலங்களில் போக்குவரத்துக்குத் தடையாக அமையும் வகையில் பாதைகள் பழுதடைதல் ஆகிய காரணங்களால் இத் தேவைகளுக்கு முன்னுரிமை வழங்கி செயற்பட வேண்டிய தாக தயவுடன் தெரிவிக்கின்றேன். |

## (இ) திண்மக் கழிவு முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| (i) நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற உக்கலடையாத கழிவுகள் திண்மக் கழிவு நிலைய பூமியின் பல இடங்களில் முறையற்ற விதத்தில் கொட்டப்பட்டிருந்தது. | நாளாந்தம் சேகரிக்கப்படுகின்ற கழிவுகளை முறையாக வேறு பிரிக்கப்பட்டு குறித்த இடங்களில் சேகரித்தல் மூலம் வளாகத்தை தூய்மையாக வைத்திருக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | உக்காத கழிவுகள் திரட்டும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் சேகரிக்கப்பட்ட கழிவுகள் கொங்ரீட் பரப்பில் இடம் போதாமை காரணமாக கட்டடத்திற்கு வெளியே கொட்டப்பட்டிருந்தது. (கணக்காய்வின் போது) அவை பின்னர் முறையாக வேறு பிரிக்கப்பட்டு களஞ்சியப்படுத்தப்படு வதற்கும் தகனம் செய்வதற்கும் இன்சி நிறுவனத்திற்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதென் |

| | | | |
|---|---|---|---|
| | | | பதை தயவுடன் தெரிவிக்கின்றேன். |
| (ii) | 2017 செப்தெம்பர் 01 ஆம் திகதிய 2034/26 இலக்க மற்றும் வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட வாறு 2017 இன் 01 ஆம் இலக்க தேசிய சுற்றாடல் கட்டளைகளுக்கு இணங்க பிளாஸ்டிக் அடங்கி கழிவுகள் திறந்தவெளியில் தகனம் செய்யப்படுவது தடை செய்யப்பட்டிருந்த போதும் நிலையத்தின் வளாகத்தில் கொட்டப்பட்டிருந்த உக்கலடையாத கழிவுகள் எரிக்கப்பட்டிருந்தன. | பிளாஸ்டிக் மற்றும் பொலிதீன் போன்ற உக்கலடையாத கழிவுகளை சுற்றாடல் நேய அடிப்படையில் அகற்றப்படல் வேண்டும். | கழிவு முகாமைத்துவ நிலையத்தில் கணக்காய்வின் போது கழிவுகள் ஹலர் செய்யப்பட்டதன் பின்னர் எஞ்சிய கழிவுகள் குழியொன்றில் இடப்பட்டு தகனம் செய்யப்பட்டுள்ளதாக அந் நிலையப் பொறுப்பதிகாரி குறிப்பிட்டுள்ளார். |

**(ஈ) நிலைபேறான அபிவிருத்தி இலக்கு**

---

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் தொடர்பான 2030 நிகழ்ச்சி நிரல் தொடர்பாக சபை அறிந்திருந்ததுடன் 03 நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் இனங்காணப்பட்டு ஒரு செயற்திட்டமும் செயற்படுத்தப்பட்டிருந்தது. | வருடாந்த வரவு செலவுத் திட்டம் தயாரிக்கப்படும் பொழுது நிலைபேறான அபிவிருத்தி நோக்கங்கள் மற்றும் இலக்குகள் இனங்காணப்பட வேண்டியதுடன் அவை செயற்படுத்தப்படுவத ற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும். | சபையின் அதிகாரப் பிரதேசத்தில் நிலைபேறான அபிவிருத்திக்காக மீளாய்வாண்டில் சமூகப் பாதுகாப்பு செயன்முறையின் கீழ் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் சுகாதாரம் மற்றும் சுத்தம் என்பவற்றுக்காக அதிகாரப் பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட 13 குடும்பங்களுக்கான மலசலகூட பொருட் கொடுப்பனவாக சுமார் ரூபா. 410,280.00 செலவிடப்பட்டுள்ளதா க தயவுடன் தெரிவிப்பதுடன், வறுமையை ஒழிப்பதற்காக இவ்வருடம் செயற் திட்டங்கள் |

| | | |
|---|---|---|
| | | மேற்கொள்ளப்படவில்லை எனவும் அடுத்த வருடங்களில் செயற்படுத்த நடவடிக்கை எடுப்பதாகவும் தயவுடன் அறிய தருகின்றேன் |

**3.2 முகாமைத்தவ செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | 05 வருடங்களைத் தாண்டியிருந்த பெற வேண்டிய கணக்கு மீதிகள் ரூபா. 1,500,802 ஆகவிருந்தது. | மேலும் அறவிடப்பட வேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பேற வேண்டிய நிலுவை மீதிகளை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. |
| (ஆ) | ஒரு வருடத்திற்கு மேலாக தீர்வு காணப்படாத செலுத்த வேண்டிய மீதிகள் ரூபா. 8,841,889 ஆகவிருந்தது. | செலுத்த வேண்டிய மீதிகளை தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கடன் கொடுத்தோருக்கு எதிர்காலத்தில் செலுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

**3.3 மனிதவள முகாமைத்துவம்**

| | கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|---|
| (அ) | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் 09 பதவிகளுக்குரிய 53 உத்தியோகத்தர்கள் மிகையாக காணப்பட்டனர். | பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 இற்கமைவாக பதவியணியினர் திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதவியணியில் 53 உததியோகத்தர்கள் மிகையாக காணப்படுவது, 20 அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியில் உள்ளடங்காத, உள்ளுராட்சி திணைக்களத்தினால் இணைக்கப்பட்டுள்ளவர்களாவர். ஏனையவர்கள் பொது நிர்வாக சுற்றறிக்கை 25/2014 |

| | | | |
|---|---|---|---|
| | | | இற்கமைவாக சேவையில் உறுதிப் படுத்தப்பட்டவர்களாவர். இவர்கள் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் என்பதையும் குறிப்பிடுகிறேன். |
| (ஆ) | பிரதேச சபை செயலாளர் பதவி உள்ளிட்ட 12 பதவிகள் தொடர்பான 19 வெற்றிடங்கள் காணப்பட்டன. | பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பிரதேச சபை செயலாளர் பதவி உள்ளிட்ட 12 பதவிகள் தொடர்பான பதவியணியினர் வெற்றிடங்களுக்கான ஆட்சேர்ப்புக்காக எதிர்காலத்தில் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை தயவுடன் தெரிவிக்கிறேன். |
| (இ) | ஓய்வு பெற்ற, இறந்த, சேவையிலிருந்து இடைவிலகிய மற்றும் இடமாற்றம் பெற்றுச் சென்ற 07 ஊழியர்களிடமிருந்து அறவிடப்பட வேண்டிய ஊழியர் கடன் மீதி ரூபா. 131,130 ஆகவிருந்தது. | நிலுவை ஊழியர் கடன் தொகையை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | நிலுவை கடன் மீதிகளை அறவிடுவதற்காக குறித்த நபர்களுக்கு கடிதம் மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. இறந்தவர்களது கடன் மீதிகள் ஓய்வூதிய திறண்ட நிதியிலிருந்து அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |

## 3.4 சொத்து முகாமைத்துவம்

### பயன்பாடற்ற மற்றும் குறை பயன்பாடுள்ள சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| கம்பக்டர் வண்டி மற்றும் டிராக்டர் டிரேலர் ஒன்றும் பயன்பாடற்றுக் காணப்பட்டது. | திருத்தம் செய்து பயன்படுத்துவதற்கு அல்லது நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கம்பக்டர் வண்டி நன்கொடையாகக் கிடைத்ததாகும். திருத்தம் செய்வதற்கான அதிகாரம் இல்லாததன் காரணமாக பயன்பாடற்றுக் காணப்படுகின்றது. டிரக்டர் டிரேலரை திருத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும். |